21
நியூஸன்ஸ்

பஸ்ஸிலிருந்து இறங்கியதும் அந்தப் பெண் கையைப் பிடித்து 'வாடி' என்று இழுத்தான் அந்த அவன்! அவள் மட்டுமல்ல, எதிரே பஸ் ஸ்டாப்பின் நேர் எதிரே இருந்த 'லால் சந்த் பாய்' டெக்ஸ்டைல்ஸ் முதலாளி காபினில் இருந்தவர்கள், பக்கத்தில் இருந்த பான் கடைக்காரன், பக்கத்தில் இருந்த ஸாரி ஷோரூம்காரன், எதிர்வரிசையில் இருந்த பலர், நடந்து கொண்டிருந்தவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தவர்கள் திடுக்கிட்டார்களாம்! அட!பெண் அல்லவா!? ரோடு அல்லவா? அல்லவா(பெண்!)

அவன் விடவில்லை! அவள் திடுக்கிட்டதும் மட்டுமல்ல. பயந்தாள்! துடித்தாள்! ஆம். இதுவரை இப்படி(செத்தது) இல்லை! முகம் வெளிறி உடல் கோபத்திலும் அவமானத்திலும் நடுங்கியது.(நடுங்கினால் மட்டும்?) தோற்றத்திலேயே அவள் சுமுகமான படித்த குடும்பத்தில் மேல் நிலையில் பிறந்த களையும்- அவளே கல்லூரிப் படிப்பின் சாரமாய் வந்த உதடுகளுக்குள் துடித்த பாஸ்ட்டட்!.... நெறிந்த ஸ்க்கௌண்ரல்....எல்லாமே பதறியது. அவனை ஒன்றும் செய்யவும் விடவில்லை. அவன் பிடி நம்பவும் இல்லை.

''வாடி! வாடின்னா?'' ஆ! யார் இவன் சுற்றியிருக்கிறவர்களில் இத்தனை பேரும் படித்தவர்கள்தானே? முகங்கள் எல்லாம் அப்படித்தான் இருந்தன. எவனுமே ஏன் வரவில்லை. துணையாக ஒரு குரல் கூடவா இல்லை. இந்த மாலை நேரக்கும்பலில் பஸ்டாண்டிலும் கூட நிறைய ஆண்கள். நிறைய இருபதுகள், முப்பதுகள் - ஒன்றுகூட துணிந்தது இல்லை. சீ! ஆண்களா இவை? நடுரோட்டில் அவன் செயல்தான் எந்த விதத்திலும் புரிந்து கொள்ள முடியாதவையாய் இருந்தன.

பெரிய பெரிய ஷோரூம்களில் எரியும் ஆர்கான், மெர்க்குரி ப்ளாஷ்கள், லைட்கள், மில்க் வைட் நியான் லைட்டுகள் இந்த அக்ரமத்துக்குத் துணை. பாதுகாப்பு. அவமானம் நெஞ்சைச் சுண்டியது. உடம்பு சூடேறி விட்டது. கத்தக் கூட முடியாமல் குரல் எழும்பாமல் தொண்டைக்குழிக்குள் அமுந்தியது. அவன் அயரவில்லை. நட்ட நடு ப்ளாட்பாரத்தில் -

அவன் இடை சுற்றி கரங்களால் மெதுவாய் பதறாமல் இழுத்து அணைத்து நெருக்கினான் அவளை. நாள் முழுவதும் ஆபீஸில் தொடர்ந்து எழுதிய அக்கவ்ண்ட் ரிஜிஸ்டரும், ப்பீரியாடிகல் ரிப்போட்டும் சதிராடின. சுற்றிலும் மனுஷர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவனுக்கும் அவளுக்கும் நிரம்ப வித்யாசம். புழுதி படிந்த ஸபாரி பாண்ட் உடலோடு ஒட்டிய ஸ்கின் ஷர்ட். அவனை விடாமல் நெருக்க உயிர் போகும் பரபரப்பு. இனி அவள் இல்லை. அவன் அயராது முனைந்தான்.

இப்போது முத்தமிட்டான். உதடுகளில் முத்தமிட்டான். கழுத்தில் ஹா! இந்த உலகில் நடுக்கூட்டத்தில் இது நிகழ்ந்தது. நடுரோட்டில் ப்ளாட்பாரத்தில். கைகளால் பிணைந்து முழங்கைகளால் இடித்து பரபரவென்று ப்றாண்டி. உதைத்து எகிறி தனியே அவள் போராடியிருக்கலாம். எதிர்பார்த்தவள் இல்லை. பழக்கமும் இல்லை. இதுபற்றி நினைத்தும் பார்த்தவள் இல்லையே. காலையில் வீடுவிட்டுப் புறப்பட்டால் மறுபடியும் ஆறரைக்குத்தான் வீடு! ஆபீஸில் லெட்ஜர்களுடன் பர்ஸனல் ரிஜிஸ்டர்களுடனும் நசுங்கி ஞாயிற்றுக்கிழமைகளில் மதியங்களில் பார்பரா கார்ட்லண்ட் கனவுகள் - சினமுற்றபோது ஹேமமாலினி மாதிரி - சில வேளைகளில் கனவுகளில் ஓமார்- விடிகிற சில வேளைகளில் அப்பாவே கூட! அப்பா! படிக்க மட்டும் வைத்த அப்பா! பாதுகாக்கவும் பாதுகாப்பு என்பது என்ன என்றும் சொல்லித் தராத அப்பா. இப்போது முத்தங்கள் - முதல் முத்தங்கள். சீத்தூ! தூ! உதடுகளில் அவன் உப்பு. உடம்பில் அவன் வியர்வை உப்பு. நெரியும் உடம்பு. அழுக்கு ஸபாரி! ஆ! விடமாட்டானா. இனி விட மாட்டான் இழுத்துப் போவான்.

அவள் படித்த நாவல்கள் வேறு பாஷை பேசின. அவள் படித்த பத்திரிகைகள் கவிதைகள் எல்லாமே வேறு பாதையில் ஓடியவை. அவள் பார்த்த சினிமாவில் தரங்கெட்ட மனிதர்கள் கூட ஹேமாவைத் தொட்டுக் கூட பேசுவதில்லை. தொட்டாலும் ஹேமா அவர்களை அறைந்தாள். இதோ இவன் புஜங்களை நெறித்து கழுத்தில் முத்தம்!ஆ!

இப்போதுதான் கூட்டம் கவிகிறது. அவனைப் பிய்க்கிறது - பிரிக்கிறது. அவன் அவள் சேலையை இறுகப் பற்றியபடி - ''வர்றியா இல்லியாடி''- நிறைய வாலிபர்கள்! இருபுறமும் அவளை அவனிடம் இருந்து பிரிக்கிறார்கள். ஏறத்தாழ பதினைந்து பேர் தாக்குதலை அவனால் சமாளிக்க முடியுமா? இத்தனை வில்கள் அம்புகளை போருக்குப் பின்தான் அறையுமோ? இப்போது அவள் நிலைகுலைந்து நின்றாள். அவனை அவளிடம் இருந்து பிரித்து இழுத்து தனியே நிறுத்தியிருந்தாலும் கூட அவள் ஸாரியின் தலைப்பு அவனிடம்தான் இருந்தது. அவள் சவமாய் நாவல்களில் அவள் படித்த பதுமையாய் அவள்!

அவனைத் துவைத்தார்கள். ஷோரூம் கண்ணாடி உடையாமல் சிலர் வரிசையாய் நின்றார்கள். அவன் சட்டை கிழிந்தது. ரத்தம் நனைத்தது. எதிர்த்து முனையாமல் அவளைப் பார்த்தபடியே நின்றான் அவன். கூட்டத்திலிருந்த ஒருவர் ஒரு காசித் துண்டு கொண்டு வந்தார். அவனைக் கையை முறுக்கி பின்னால் கொண்டுபோய் முதுகின் புறமாய் நெருக்கமாய் ஒருவர் பிடிக்க - ஒருவர் அந்த காசித்துண்டால் முறுக்கிக் கட்டினார். இப்போதும் ஒருவர் ஓங்கி அறைந்தார். உதடுகள் தடித்து கனிந்து ரத்தம் தந்தன. உப்புச் சுவையுடன் கடைவாய் மினுங்கியது. அவனை எல்லோரும் பல கேள்விகள் கேட்டார்கள். அவன் பதில் சொல்லவில்லை. பலமுறை எல்லாரும் கேட்ட கேள்வி. ''நீ யார்?'' - அவளும் உள்ளே துடித்து செத்த கேள்வி. அவளை ஆதரவாய் ஒரு நாற்காலியில் லால் சந்த் பாய் டெக்ஸ்டைல் கடை உள்ளே

உட்காரவைத்திருந்தார்கள். புது ஸாரி உடுத்திருந்தாள். அதே கடை லேடி ஸ்டாப்கள் ரெண்டு பேர் அவளையும் பல கேள்விகளால் துளைத்தார்கள். அவளும் பேசமுடியாதபடி சிதைந்து போயிருந்தாள். உடலில் காயங்கள் ஏதுமில்லை. உருவி எடுத்து நிர்வாணம் ஆக்கியவள் போல் இருந்தாள். கடை உள்ளேயிருந்து கைகள் கட்டப்பட்ட ஆப்ரிக்க அடிமை போல பின்புறம் தோற்றம் தந்த அவனைப் பார்த்தபடி உட்கார்ந்து சாய்ந்திருந்தாள், அவள்.

டாக்ஸியில் போலீஸ் காக்கி வந்து நின்றது. இறங்கியதுமே பூட்ஸ்காலால் ஒரு மிதி அவனுக்கு! ப்ளாட்பாரத்திலிருந்து நடுரோட்டில் போய் விழுந்த அவனை இரண்டு போலீஸ் நீலத் தொப்பிகள் பிதுக்கி எடுத்து வந்து இன்ஸ்பெக்டர் முன்னே போட்டார்கள். இம்முறை உதை அடிவயிற்றில்! ''ஹம்'' என்ற சப்தம் அவனிடமிருந்து. தூக்கி ஜீப்பில் எறிந்தார்கள். ஆறு போலீஸ்கள் உள்ளே வந்தார்கள். இன்ஸ்பெக்டரும் கடைமுதலாளியும் பலரும் நிறைய பேசினார்கள். அவள் வேலை செய்கிற இடத்தை ஒருவன் மிகச் சரியாகவே சொன்னான். அவள் எந்த ஏரியாவில் இருந்து வருகிறாள் என்பதையும் 'பாவம்' என்று சொன்னான். அடுத்த கடைக்காரன். அவள் பூமி குலுங்கியது. ஒருத்தன் அவளை வீட்டில் விட்டு வந்து விடுவதாக சொன்னான். நிமிர்ந்து பார்த்தாள். லால் சந்த் பாய்தான். முதலாளியில்லையா?

அவன் முகம் கூட தெரியவில்லை. ரத்தம்! தூக்கி ஒரு ஓரத்தில் ஜீப்பில் நிறுத்தியிருந்தார்கள். இன்ஸ்பெக்டர் இளைஞர். சிவப்பு-துடிப்பு-அதைவிட அவளை ஆழ்ந்தான் - நெருங்கினான். இன்ஸ்பெக்டர்! ''மே ஐ நோ யுவர் குட் நேம் ப்ளீஸ்....?'' வெள்ளைத்தாளில் மேலே ஏதோ எழுதினான். கூட்டம் நெறித்தது. இப்போதும் கூட்டம் - இனியும் கூட்டம்தான் . கண்ணாடி ஷோரூம் வெளியே இருந்தும் ஏகப்பட்ட கண்கள். அந்தக் கடை லேடி ஸ்டாப்.....கொஞ்சம் சிரிப்போடே. ''உங்க பேரு கேக்றாங்க சொல்லுங்க!'' என்றாள்.

''எஸ். லக்ஷ்மி!''

''அப்பா பெயர்?''

''ஜி.ராமநாதன். அக்கவண்டன்ட் ஏஜிஸ் ஆபீஸ்.''

அவள் ஜீப்பில் ஏறுமுன் அவள் அப்பா ராமநாதனும் வந்து சேர்ந்தார். கோவென்று கதற நினைத்தாள்தான். அவனும் ஆம்பிளை! அவனும் ஆண்! அவனும்.... அவனும்....

*

பரீட்சை நிகழ்ந்து கொண்டிருந்தது. அது அரசு விண்ணப்பப் பரீட்சை. நிறைய மாணவிகள், மாணவர்கள். எல்லா முகங்களும் கேள்விகள்-விடைகள்-பேட்டர்கள் கசகசத்தன. பெரிய ஹால். ஏகப்பட்ட ஜன்னல்கள். வாயில்கள் - நீண்ட பெஞ்சுகள். வரிசை வரிசையாய் மாணவர்கள். கனவு

போன்ற மௌனம். இருவரிசைகளிலும் இரண்டு என்று ஆசிரியர்கள் ஹாலின் நடுநாயகமாக தலைவர் போல ஒரு ஆசிரியர்.

முன்னால் ஒரு மாணவன்!

அமைதியாய் உட்கார்ந்திருக்கிறான்.

அவன் விடைத்தாள் முழுவதும் கறுப்பு! எழுதிய கறுப்பல்ல. ஊற்றிய கறுப்பு. எதிரே சந்தேகத்தோடு நெருங்கினார். விடைத்தாளின் முதல் ஏட்டில் அகன்று இளிக்கும் மண்டை ஓடு!

''என்னப்பா இது? பதில் எழுதவரவில்லையா நீ?''

''இதுதான் பதில்!''

''யார் அங்கே? சீப் எக்ஸாமினரெ வரச் சொல்லுங்க!''

ஆசிரியர்கள் கூட்டம் சற்று நேரத்தில் அங்கே நெளிந்தது. பரபரப்பு. செய்தி சற்றே நேரத்தில் பறக்கிறது. ஒரு ஆசிரியர் கேட்டார் - ''ஓ! நீ கம்யூனிஸ்ட்டா?''

இனியொருவர் சொன்னார்- ''கருமையின் நிறம் அயோக்யத்தனம்!''

''இல்லேங்க- நிழல் மறைத்த ஒளிகள்!''

''பார்ற! இவரு வேற சினிமாவசனம் பேசுறாரு!''

''பளார்'' - ஒரு அறை! அறைந்தவர் பரீட்டை எழுதவந்தவர். வாங்கியவர் சீப் எக்ஸாமினர். பேச்சு நின்று ஒரு கணம் பேய் அமைதி. மறுபடி ஒரு அறை! பளார் என்ற சப்தம் விண்ணென்று தெறித்தது. இம்முறையும் அதே முறை அதே வழி! அமைதி. ஆசிரியர்கள் பாய்ந்து பிடிக்கிறார்கள் மாணவனை! அவர் மாணவராய் இருந்தவர்! மாணவரா? ரகளை - அடிதடி. ஒரு மணிநேரம் பரீட்சை தடைப்பட்டது. கூட்டம் - வெளிக்கூட்டம் வேறு போலீஸ்க்கு போன் பறக்கிறது. கூட்டம் திமிலோகப் படுகிறது.

போலீஸ் ஸ்டேஷனில் -

''உம் பேர் என்ன மிஸ்டர்?''

''சுப்ரமணியன்''

''இன்ஷியல்''

''பி''

''அப்பா பேரு?''

''பெருமாள்''

''என்ன படிச்சே?''

''பி.ஏ.''

''படிச்சிட்டு இப்டித்தான் வாத்தியாரெ ஒதைக்கச் சொல்லியிருக்கா?''

''ஒதைக்கல்லியே....அடிச்சேன்!''

நிஜமாகவே ஒரு உதை விழுந்தது அவனுக்கு. பூட்ஸ் கால் வயிற்றுக் குடல்களை நெஞ்சுக்கு ஏற்றி இறக்கியது. இரண்டாவது உதையில் கண்பிதுங்கி விலாவில் உலுக்கி வாங்கியது.

''நீ கம்யூனிஸ்ட்தானே?'' - உறுமினார் இன்ஸ்பெக்டர்.

''நான் ....இன்னும் ஒரு தடவை வறுமையின் நிறம் சிவப்பு பாக்கறேன்!''

மறுபடி முதுகில் ஒரு மிதி. இப்போது இரண்டு போலீஸ்காரர்கள் தூக்கிப் பிடித்து உதைத்தார்கள்.

''எதுக்கு பரீட்சை எழுதப்போனே?''

''.............''

''எதுக்கு பரீட்டை பேப்பர் எல்லாம் மண்டை ஓடு போட்டு....ராஸ்கல்- உங்கப்பா வருவாரு இரு?''

''போயா - தட்ரோக்- அய் ஜஸ்ட் கோயிங்டு கிக் லைக்திஸ்! அப்பனாம் அப்பன்?''

பெருமாள் வந்தார் - ''அடிப்பாவி!!'' என்றார்.

''உங்க மகனா? நீங்க எங்க ஸார் இருக்கீங்க? சுத்த திமிர் பிடிச்சவனா இருக்கானே!'' இன்ஸ்பெக்டர் மீண்டும் ''எப்டி புள்ளை பெத்து இருக்கீங்க! வாத்தியாரையே எத்துற புள்ளை!''

''என் தலைவிதி ஸார். வெளிய இவன் அம்மா வேற நிக்கிறா. தங்கச்சி வேற. வயித்தெரிச்சல்''

''உங்களுக்கு என்னா சம்பளம்? எங்க இருக்கீங்கன்னு கேட்டேனே-''

''வேலை - செக்ரட்டெரியேட்ல க்ளார்க். ''

''ஒரு அம்பது ரூபா எடுங்க-''

''அம்பது ரூபாயா??!!!''

*

அது ஒரு சைக்கிள் கடை! சைக்கிள் கடைமட்டுமில்லை, வெற்றிலை பாக்குக் கடை. பக்கத்தில்-எதிரே 4பி, 5சி, 22எஃப், 44பி, பஸ் ஸ்டாப்! ஐஞ்சு பஸ் சராசரியாய் இருபது பாஸஞ்சர் பத்து நிமிஷத்துக்கு! கூட்டம் சைக்கிள் கடை முன்னால் ஒரு நெஸ் கபே ஜார்! நாலு நாற்காலிகள் ரெண்டு ஸ்டூல்கள், பெட்டிக்கடை வெற்றிலை பாக்கு. வெளிவாசலில் சுப்ரமண்யன். இருபத்தைந்து வருஷமாய் அவன் காம்ப் இங்கேதான்.

அஞ்சு வயசில் மிட்டாய் வாங்கியபோது இது துலுக்கங்கடை. அப்போ கறிகாய் வியாபாரம் கூட உண்டு. பள்ளிக்கூடம் படிக்கிற சமயத்தில் நோட்டு இங்கு. காலேஜ் படிக்கிறப்போ சார்மினார் - ஜிஞ்சர் - கஷாயம்! அப்பா கேட்டார். - ''ஏண்டா பாவி சந்து முனைலியே அந்த கணேசன் சைக்கிள் கடைலியே நிக்கிறே?''

''வேற என்ன பண்ணச் சொல்றீங்க?''

அப்ளிகேஷன் போட்றது மனு எழுதுறது டைப் பண்றது மறுபடி வாண்டட் காலம் பாக்குறது. ஆ! வேலை இல்லாத இளைஞன். இளைஞர்கள் - எங்களுக்கு வேலை இல்லைன்னு ஊர்ஜிதமாற எடமே கணேசன் சைக்கிள்கடை! சைக்கிள் கடை கணேசன் சரியான ஆள். கடன் கொடுப்பான்-கொடுத்துவிட்டுத் திட்டுவான்.

அப்பா பெத்துவிட்டு திட்டுவார். அம்மா பெற்றுவிட்டு அலுத்துக் கொள்வாள்.

அவன் கேள்வி''ஏன் எங்கிட்ட கேக்றாங்க! கேட்டா அப்படித்தான் பேசுவேன்.'' அப்பா சொன்னர்: ''காலம், என் காலம்டா இதெல்லாம்!'' ஒரு சைக்கிள் கடை! அங்கே உட்கார்ந்திருக்கும் வேலையில்லா பட்டதாரி! அடேடே! மாலை நெருங்கும்போது - கணேசனிடம் நெருங்கி நிற்பான். இன்னைக்கு இது போதும்டா சுப்ரமண்யன்! பேசாமல் இருந்திருப்பான் சுப்ரமண்யன்.

அலுமனிய டம்ளிரில் செம்மஞ்சளான துடிக்கும் திரவத்தை ஊற்றி முன்னால் வைப்பான் கணேசன், கீழே வைக்கோல் குவியலிலிருக்கும் ஜாடியிலிருந்து எடுத்த திராவகம்! அக்கினி சாப்பிட நிறைய நபர்கள். இலை நுணுங்கல் வியாபாரமும் உண்டு. வாங்க வருகிறவர்கள் போக்கே ஒரு மாதிரி-

பாத்தாயிற்றாம்! உத்தியோகம் வேணுமாம்! இல்லாத உத்யோகம் எப்படி வரும்? தினமும் கபாலீச்வரர் சந்நதிக்கு விஜயம்! நிறைய அப்ளிகேஷன் போஸ்டல் ஆடர் ரிஜிஸ்டர் போஸ்ட்! கடைசியில் - ஜிஞ்சர் - ஒரு அவுன்ஸ்! குடல் அக்கி மேலே தனித்தீ ஊற்றியதுபோல!

ஒரு வயதான கிழவர்- தொண்ணூறு வயசு இருக்கும். ஏன் உயிரோடு இருக்கிறான் இவன் - கோடிவீட்டு ஐயர்! சற்றே கூனல் - இன்னும் சுயமாக நடக்கிறார், பார்க்கிறார், தினமும் பேப்பர் - இன்று பேப்பரை நேற்று மாலையிலேயே பார்க்கத் துடிக்கிற துடிப்பு - கண்ணில் வெள்ளிப்ரேம் கண்ணாடி. ராஜாராமய்யர்! பென்ஷண்ட் ஆபீஸர். பிள்ளை கெமிகல் கம்பெனியில் மேனேஜர். இனியொரு பெண் ஏர்லைன்ஸில்! இனியொரு பெண் ஏதோ எம்பஸியில்! சின்ன வீடு! வசதி-தோட்டம். தினமும் மார்னிங் வாக். உடம்புக்கு நல்லது.

''பவன்ஸ்ஜர்னல் இருக்கா கணேஷ்!?'' - கிழவர் கேட்டது. அவ்வளவுதான்!- எழுந்தது தெரிந்தது- என்ன செய்தான் என்றே அவனுக்கே தெரியாது! கூட்டம்-ரோட்டில் போனவர்கள்-வந்தவர்கள் - எதிர் வீட்டில் நின்றவர்கள் - ஓடி வந்தார்கள். கிழவர் மூச்சு திணறி குப்புற விழுந்திருந்தார். கழுத்தைச் சுற்றி நீலம் பாரித்திருந்தது. கண்கள் பிதுங்கியபடி. உயிர்போய் விட்டதா? சோடா உடைத்து ஒருவர் முகத்தில் தெளித்தார்- தூக்கிக் கிடத்தினார்கள். இரண்டுபேர் அவனைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். பளீர் பளீரென்று அறைகள் விழுந்தன. கணேசன்தான் வேண்டாம் வேண்டாம் என்று கூக்குரலிட்டான். கிழவர் வீட்டிலிருந்து அதற்குள் பிள்ளைகள், பெண்கள் - அந்த கிழத்தின் மனைவி எல்லாம் வந்தாயிற்று.

''பொறுக்கி ராஸ்க்கல்! வெட்டி ராஸ்கல்!''

கிழவரின் இளைய பிள்ளை சுப்ரமண்யன் சட்டையைப் பிடித்து முறுக்கி உலுக்கியபடி கேட்டான், ''ஏண்டா கழுத்தெ நெறிச்சே எங்கப்பா கழுத்தெ?''

''தெரியலை? தொலைக்கத்தான் - இதோட ஒழிக்கத்தான்!''

''அடப்பாவி!''

''ஏன் இனிமே அவர் இருந்து என்ன பண்ணனும்!''

''குடிச்சிருக்கான்! போலீசெக் கூப்பிடுங்க! அயோக்கியன்''

''வேண்டாம் ஸார் பாவம்! ஏதோ தப்பு பண்ணீட்டான் உட்டுடுங்க'' - இது கணேசன். கணேசன் பெண்டாட்டி சொன்னாள் - ''பாவம் சார் வீட்ல சோறு கூட போடுறது இல்ல. இப்படியே இங்கேயே கிடக்கும் ஜிஞ்சர் சாப்ட்டு குட்டிச் செவராய்டிச்சு இப்டி. அப்பாவி பாவம்!''

''நாலுபோடுங்க பாவமாம் பாவம். ராஸ்கல் கொஞ்சம் இருந்தா கொலை விழுந்திருக்கும். ''கான்ஸ்டபிள் வந்தார் - ராஜநாயகம் - அதே தெரு - சுப்ரமண்யன் அப்பாவெத் தெரியும். ''என்னாப்பா இங்க கூச்சல் - போ போ எல்லாம் - கூட்டம் ஒதவாது ஏய்யா சொல்லணுமா போபோ!'' நமக்கென்ன வென்று சிதறியது கூட்டம். கணேசனிடம் நெருங்கி நின்று தழைந்த குரலில் பேசினார் ராஜநாயகம். ஏண்டா உங்களுக்கு இந்த கொழுப்பு என்றார். ஒரு டம்ளர் ப்ரூ காப்பி சாப்பிட்டார். உதடுகளைத் துடைத்துக் கொண்டார். கணேசன் சிகரட் கொடுத்து அவனே பற்றவைத்தும் விட்டான்.

''வர்றேம்பா! ஏய் சுப்ரமணி! ஒழுங்கா இரு இல்லெ உள்ளெ போவேண்டி வரும் ஆம்மா'' என்றார்.

''உள்ளேயா! வர்றேனே!''

''உங்கப்பா நல்ல மனுஷண்டா பேரெக் கெடுத்துடாதெ''

''அப்பா தெரியும் - உங்க ப்ரெண்ட். ராத்ரி வாங்க கணேசன் ஜிஞ்சர் தருவான். அப்பாவாம்!''

''என்னடா சொன்னெ!'' அறை விழுந்தது. நாலைந்து அறை. கணேசன் ஓடிவந்து பிடித்தபோது கடைவாய் வழியே ரத்தம்!

''ஏண்டா இவன் ஏதாச்சும் தப்புதண்டா பண்றானா? யாரார் இவனோட ப்ரெண்ட்?!''

''அதெல்லாம் யாரும் ப்ரெண்ட் கிடையாதுங்க. சார் நீங்க போங்க ஏய் பேசாம இருடா சுப்ரமணி!''

''இவரு வர்றது ஜிஞ்சருக்குத் தானேடா! ஊத்திக்குடேன்'' மறுபடியும் கை ஓங்கினார் ராஜநாயகம். கடைவாசலில் பெருமாள் - சுப்ரமணி அப்பா! என்னடா இது இப்படியிருக்கான் உள் பிள்ளை! கணேசன் பேரேட்டை எடுத்து இன்றைய செலவு பத்து பதிமூன்று ரூபாயை சுப்ரமணியன் கணக்கில் எழுதினான். ''எவ்வளவு?'' என்றான்· சுப்ரமண்யன். ''நூத்திப்பதினெட்டு ரூபாய் ஆச்சு!''

*

வெஸ்ட் போலீஸ் ஸ்டேஷன். முழங்காலைக் கட்டியபடி உட்கார்ந்திருந்தான் சுப்ரமணி! முகம் எல்லாம் கன்றி நீலம் பாரித்திருந்தது. உதடுகளும் வீங்கி உடலின் பல பாகங்களிலும் நீலத் தடிப்புகள். கேள்விகள் -

உதை. உடம்பென்னவோ தாங்கத்தான் தாங்கியது. இது மூன்றாம் முறை - யாரும் கருணை காட்டவில்லை. மூர்க்கத்தனம் கூட அவன் அடி வாங்குகிற பான்மையில் களைத்தது. இனி எங்கே அடிப்பது? அவர்களுக்கும் அருவெறுப்பு. அடிவாங்கும்போது அழுகை-ஒரு எதிர்ப்பு-கூச்சல் அலறல் எதுவுமே இல்லை. அடிப்பவர்களுக்கும் அவனைப் பார்த்தால் தயக்கம். ஆறு நாட்கள் அப்பா-அம்மா-தங்கை யாரும் வரவில்லை. ரிப்போர்ட்டை அவன் மீது கொடுத்தவர்கள் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன் என்றார்கள். இன்ஸ்பெக்டருக்கும் தயக்கம்தான்! நியூஸன்ஸில் போடலாமா? என்ன செய்யலாம்! கடைசியாய் இவன் செய்திருப்பது மொலஸ்ட் கேஸாகுமா? நடுரோட்டில் அணைத்து முத்தம்! எதிலே போடலாம்? விசாரணையின் போது அவன் சொன்ன பதில்களும் அப்படியேதான் அருவெறுப்பாய் முடிந்தது.

''ஜிஞ்சர் அடிப்பியா?''

''வேற வழி!''

''சாராயம்?''

''ம்''

''எலை!?''

''அதுவும்தான்!''

''லேக்கா?''

''கிடைச்சா உண்டு!''

''ஏன் இதெல்லாம்? ஒழுங்கா இருக்கமாட்டியா?''

''ஒழுங்கு! அப்டின்னா நீங்க சொல்றதா?''

''நீ நக்ஸ்லைட்டா?''

''எதுக்கறவன் எல்லாம் நக்ஸலைட்டாக்கும்!''

''மறுபடி உதைவாங்கப் போறே நீ!''

''உதைங்களேன்! ஆனா சொல்லாதீங்க உதைக்கறேன் உதைக்கறேன்னு!''

''என்னதான் செய்யணும்ங்கிறே நீ! எல்லா தப்பும் பண்ணியிருக்கே. ஏழு வருஷம் கெடைக்கும் தெரியுமா?''

''கொலை பண்ணா எத்தனை வரும் கெடைக்கும் ஸார்?''

''பத்தியா! ஆரம்பிச்சிட்டீல்ல! படிக்கிற பய்யனாச்சே வேலை கெடைக்காம அலையற ஸ்டூடண்டாச்சேன்னு பாக்கறேன். இல்லேன்னா?

''அடிச்சு உரிச்சு எடுப்பீங்க... இல்லேன்னா...''

''அடிச்சு உரிக்க இனிமே அங்க என்ன இருக்கு... மிச்சம் உயிர்தான். ஏன் இப்படியெல்லாம் பண்ணனும்?...''

''பாவமா இருக்கா?'' - சிரித்தான் சுப்ரமண்யன். உதடு கோணிக் கொண்டு போய் ரத்தம் கனிந்தது. ''நீ செஞ்ச எல்லாம் ரொம்ப சரின்னு நினைப்பா உனக்கு?''

''நீங்க பண்ற எல்லாம் சரீன்னுதான் எல்லாரும் நம்பறாங்களே!?''

''ஏய்!'' - இன்ஸ்பெக்டரின் சப்தம் எதிரொலித்தது. அதே நேரம் ஒரு கான்ஸ்டபிளுடன் உள்ளே வந்தார்கள் இருவர். ஒரு நபர் ராமநாதன். ஏஜிஎஸ் ஆபீஸ்! இன்னொன்று லக்ஷ்மி. பாதிக்கப்பட்ட பெண். ஸ்டேட்மெண்ட் கொடுத்தது சரியில்லை என்று மறுமுறை கூப்பிட்டிருந்தார்கள் புதுசாய் ஸ்டேட்மென்ட் வாங்க. வந்திருந்தார் ராமநாதன். ''குட்மார்னிங் ஸார் ஸ்டேட்மெண்ட் சரில்லேன்னீங்களாமே ஸார்!'' ரராமநாதன் படபடப்போடு கேட்டார். ''ஆமா ஸார். ரொம்ப ஹேஸியா மேல் போக்கா இருக்கு உங்க ஸ்டேட்மெண்ட். உங்க ஸ்டேட்மெண்ட்லதான் இவன் உள்ள போக வலுவா காரணம் வேணும். இவன் பண்ணியிருக்க காரியம் நியூஸன்ஸ் கேஸாத்தான் ஆகும். பாதிக்கப்பட்டவங்க இவன் மேல உள்ள தள்ற மாதிரி ஸ்டேட்மெண்ட் குடுக்க மாட்டேங்கிறாங்க. பாவம்ங்கறாங்க. உங்க ஸ்டேட்மெண்டும் தொந்தரவு குடுத்ததாத்தான் இருக்கு. மொலஸ்ட் பண்ண வந்தான்னோ கொலை பண்ணவந்தான்னோ ஒண்ணும் இல்லெ. மோட்டிவ் இல்லெ. இவனெ ரெண்டு நாள் வெச்சு உதச்சு வெளிய உட்டாலும் இவன் இப்படியேதான் இருப்பான். இங்கியேதான் இப்படி வீக்கான கேஸா வர்றமாதிரிதான் பண்ணுவான்.'' ''எங்களை என்ன பண்ணச் சொல்றீங்க இன்ஸ்பெக்கடர் ஸார்?'' - சுப்ரமண்யனைத் திரும்பிப் பார்த்தார் ராமநாதன். அவரையே பார்த்துக் கொண்டு ஸ்டூலில் உட்கார்ந்திருந்தான் சுப்ரமண்யன். அவரால் அவன் கண்களிலிருந்து தப்ப முடியவில்லை. பதிலும் சொல்ல முடியவில்லை. சுப்ரமணியன் கண்கள் சிவந்து பிதுங்கிக் கொண்டிருந்தன. உடம்பின் நீலங்கள் பயமுறுத்தின. சிவப்புக்கள் உயிரைத் தொட்டன. இன்ஸ்பெக்டர் சொன்னார்.

''இவன் மேல கேஸ் இருந்தாப் போதாது. ஒரு வழியா இவன் வெளிய இல்லாம பண்ற மாதிரி இருக்கணும் கேஸ்!'' லக்ஷ்மி அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள். நேற்று நின்ற நிலை ஞாபகம் வந்தது. ''நான் எழுதிக் கொடுத்த ஸ்டேட்மெண்டை வாபஸ் வாங்கிக்கிறேன்!'' என்றாள் லக்ஷ்மி.

''ஏம்மா அப்படி சொல்றே!'' என்றார் ராமநாதன்.

''இனிமே என்னப்பா வேணும்? அவரெ கொல்லணுமா? உள்ளே வருஷக்கணக்கா தள்ளி?''

''ரொம்ப அபாயமான பைய்யம்மா அவன்!''

''ஏம்பா நாம எல்லாம் ரொம்ப ஒழுங்கோ?'' என்றாள் லக்ஷ்மி பைத்தியம் பிடித்த மாதிரியான அலறலில். ''என்னா சார் ஆச்சு உங்க பெண்ணுக்கு! உளற ஆரமிச்சிருச்சே! என்ன பேசுது உட்டுடணும்ன்னு!'' இன்ஸ்பெக்டர்.

''ஆமா சார்! ரோட்ல என்னைக் கட்டிப் பிடுச்சுட்டார்! அதுக்கு தண்டனை- என்ன - கொலையா?'' என்றாள் லக்ஷ்மி. அவளை உக்கார வைத்தார்கள். புத்தி சொன்னார்கள். அவள் சுப்ரமண்யனைப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். விரித்த கண்களோடு. அவனை இப்போது என்ன செய்வது. பெண்ணும் ஸ்வாதீனமாய் இல்லை. பயந்தார்கள். ''இல்லெ எனக்கு அவரெப் புரியிது. நானும் அவர் மாதிரிதான்! வீட்ல என்னெ அடச்சிருக்காங்க! சம்பாரிச்சுப்

போட்டு, சமச்சுப் போடறேன். பத்துபேர் என்னெ வீட்ல காவல் காக்கறா! அண்ணா, அம்மா, மன்னி, அப்பா! அடிக்கறதில்லெ மிதிக்கறா! உதைக்கறதில்லே பிழியறா! எனக்கானும் வேலை இருக்கு! சம்பளம் இருக்கு வழியும் இருக்கு. என்னால தனியா இருக்க முடியும். கல்யாணம்ன்னு வரும்போது இதே கதைதான்.''

''என்ன ஸார் இது? நேத்து இன்ஸிடன்ட்டாலெ மூளை குழம்பிப் போச்சா? ஸ்டேட்மென்ட்டெ வாங்க முடியாதோ?''

''இன்ஸ்பெக்டர்... ஸார்! என்னெ உள்ள தள்ளுங்க. உதைங்க அது தேவலை! வீட்ல இருக்கேனோ? இல்லையோ?... ஆபீஸ்ல இருக்கேன். வீட்ல அம்மாகிட்டக்க கெடக்கேன். 'ஆ' மன்னி குளிக்கிறப்போ ஒதுங்கறப்போ கவனமா பாக்கறா! ஒழுங்கா இருக்கேனோல்யோ? மிதிக்கறா! ராத்திரி தூங்கறேனான்னு அம்மா பாக்கறா! அப்பா ஒழுங்கா வர்றேனான்னு கவனிச்சுண்டேயிருக்கார்... இவர் தேவலை. கட்டிப்பிடிச்சு அப்டியே முத்தி... வேற என்ன?'' சுப்ரமண்யன் அவளைத் திரும்பிப் பார்த்தான். வெள்ளைஸாரி. - இரவு முழுவதும் தூங்காத கண்கள். பின்னி நீண்டு தொங்கிய ஜடையும் குஞ்சமும், கால்களில் மருதாணிச் சிகப்பு. கண்களில் அசாத்ய பளபளப்பு. பைத்யமோ?

''ஸ்டேட்மெண்ட் மாத்தமுடியாதது மட்டுமில்லே கேசே போட முடியாது போல இருக்கே...பைத்யம்தான்!''

''அம்மா குழந்தே! தோபார் பயந்துட்டயா? பாவிப்பயல்! நாசமாப் போய்ட்டாளே! கெடுத்துட்டானே!'' -

''சரிசரி சத்தம் போடாதீங்க! பொண்ணெக் கூட்டிகிட்டுப் போங்க. இப்புடிப் போனதுக்கே காரணம் இவன்தான்னு கூட கேஸ்ல கொண்டு வரமுடியாதுபோல இருக்கே! போங்க போங்க குட்டிச்சுவர்தான் எல்லாம்...'' பெண்ணும் தகப்பனும் வெளியே போனார்கள். வேறுவழியில்லாமல் சுப்ரமண்யன் இன்ஸ்பெக்டரை உற்றுப் பார்த்தான். ''இது நியூஸன்ஸ் கேஸ்தான்!'' என்றார் இன்ஸ்பெக்டர். பஸ்ஸில் உட்கார்ந்திருந்த லக்ஷ்மி ''அப்பா எல்லாமே நியூஸன்ஸ்தானே'' என்றாள்!

(சௌந்திரசுகன் - மே 2003)